# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - III)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )

1970ம் ஆண்டு ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - இடதுசாரிக் கூட்டணி ஆட்சியை ஐக்கிய முன்னணி அரசாங்கம் என பெயரிட்டு இருந்தார்கள். இந்த ஆட்சி நல்ல பல திட்டங்களை உருவாக்க முயற்சித்திருந்தாலும் அவை யாவும் வெற்றியளிக்காமையின் காரணமாக தமிழ்மக்கள் மட்டுமின்றி நாட்டின் ஏனைய பெரும்பான்மையின மக்களும் கூட விரக்தி நிலைமைக்கு ஆளாகியிருந்தார்கள். அதன் பிரதிபலிப்பாகவே 1977ம் ஆண்டைய பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 140 தொகுதிகளில் வெற்றி பெற்று 4/5 பெரும்பான்மையையும் பெற சுதந்திரக் கட்சி 08 தொகுதிகளில் மட்டும் வெற்றியைக் காணக்கூடியதாகியது. இடதுசாரிகளான லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன்பின்னரான எந்தத் தேர்தலிலும் நேரடியாக போட்டியிட முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தன.

**ஐந்து வருடத் திட்டம்**

1972 – 1976ம் ஆண்டுவரையிலான ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை ஐக்கிய முன்னணி அரசு கொண்டு வந்தது. அது நாட்டின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவும் நுகரும் பொருட்களின் இறக்குமதியை குறைக்கவும் என ஒரு கலப்புப் பொருளாதார முறையை ஆரம்பித்து அமுல்படுத்தி வந்தார்கள். அதற்கான வேலைத் திட்டங்களாக:

1. உற்பத்தி செய்கையில் ஈடுபடுத்தப்படாத காணிகளை பாரமெடுத்து அவற்றைப் பயன்படுத்தக் கூடியவர்களுக்கு செய்கைக்காக கையளித்தல்.
2. உணவுத் தானியங்களை மாகாணம் விட்டு வேறு மாகாணத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடைசெய்தல்
3. காணி உச்ச வரம்பு சட்டத்தை கொணர்ந்து ஒருவர் 50 ஏக்கருக்கு கூடுதலாக மேட்டு நிலத்தையும் 25 ஏக்கருக்கு கூடுதலாக வயற்காணியையும் கொண்டிருக்காது செய்தல்.
4. நிலச்சுவாந்தர்களிடமிருந்து காணி உச்ச வரம்புக்கு கூடியதாகவிருந்து அரசு பெற்ற காணிகளை தகுதியான காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளித்தல்.
5. உற்பத்தி செய்யப்படும் முழு நெல்லையும் ஒரு நிச்சயிக்கப்பட்ட உத்தரவாத விலைக்கு நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் அரசே கொள்வனவு செய்தல்.
6. கொள்வனவு செய்த நெல்லை ஆலையில் அரிசியாக்கி நுகர்வோருக்கு கொடுத்தல்.
7. ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதித் தீர்வையை உயர்த்தல்.

போன்ற வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

டாக்டர் என். எம். பெரேரா நிதி அமைச்சராகவிருந்து முற்போட்ட இடதுசாரிக் கொள்கை அடிப்படையிலான இந்தத் திட்டங்கள் சிறந்தவையாக காணப்பட்டிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அடிமட்டத்தில் சிரமங்களும் வளங்கள் போதாமையும் சில ஊழல்களும் இருக்கத்தான் செய்தன. கையேற்கப்பட்ட உச்ச வரம்புக்கு மேலதிக காணிகளுக்கு நஸ்டஈடு வழங்குவதிலும் நெல் கொள்வனவிலும் ஆலைகளில்

அரிசியாக்குவதிலும் அதிகாரிகளினது ஊழல்கள் இருந்ததாலும் மேலும் 1972-1974ம் ஆண்டு காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட வரட்சியான கால நிலைமையினாலும் எதிர்பார்த்த விளைச்சலும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படாதது திட்டம் தோல்வியடையக் காரணமாயின. விலைவாசிகள் உயர்ந்தன. நாட்டில் பஞ்ச சூழ்நிலை ஏற்பட்டது. அரிசி சீனித் தட்டுப்பாடு பால்மா விலையதிகரிப்பு பாண் வாங்குவதற்கு (Queue) வரிசையில் நிற்பது எனப் பல்வேறு அசௌகரியங்கள் பொது மக்களுக்கு ஏற்பட்டது. உணவுத்தேவையில் 30% மான அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியேற்பட்டது. விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி குறைவடைந்தது. மக்கள் மரவள்ளி வற்றாளை போன்ற கிழங்கு வகைகளையும் பாசிப்பயறு போன்ற தானியச் சாப்பாடுகளையும் பாலில்லாத வெறும் தேநீர் (plain tea) கருப்பட்டி துண்டுடன் அல்லது சீனியைக் கையில் எடுத்து வைத்து குடித்த காலமாக இருந்தது. 1938 லிருந்து 1944 வரை இதே போன்ற பஞ்ச நிலைமை இரண்டாம் உலகயுத்த கால இறுதியிலும் ஏற்பட்டிருந்தது என எமது மூத்த பரம்பரையினரால் கூறப்பட்டு வந்துள்ளது.

**தமிழ் மக்களைச் சீண்டிய செயல்கள்**

இவ்வாறான நாட்டு நிலைமைகளுக்குள் கல்விச் சீர்திருத்தம் என்ற வகையில் கல்வித் தரப்படுத்தல் முறைமையை அரசு அறிமுகப்படுத்தியது. இச்செய்கையால் உயர் கல்வியைப் பெறத் துடித்திருந்த வட மாகாண தமிழ் மாணவர்களுக்கு இது பேரிடியாக அமைந்தது. சரியோ பிழையோ ஆங்கிலேயர் அரசாண்ட ஆரம்ப காலத்தில் அவர்களின் அறிவுபூர்வ அனுபவ நிலைப்பாட்டில் வடக்கில் யாழ்ப்பாணத்திலும் தெற்கில் காலி மாத்தறை போன்ற பகுதிகளிலும் பல மிஸனரிப் பாடசாலைகள் நிறுவப்பட்டதால் இப்பகுதிகள் கல்வியில் முன்னேற்றமடைந்த நகரங்களாயின. சிறந்த உயர்தரக் கல்விப் பெறுபேறுகளை இம்மாவட்ட மாணவர்களே பெற்று வந்திருந்தார்கள் என்பது உண்மை. அரசில் கல்வி அமைச்சராகவிருந்த டாக்டர். பதுர்தீன் மொகமெட் (1904 – 1997) கொண்டுவந்த கல்வித் தரப்படுத்தல் முறைமை காரணமாக உயர்கல்வி வாய்ப்புக்கள் நாட்டில் மாகாண ரீதியாக வாழும் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களின் தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்டதால் அதிக புள்ளிகள் பெற்றுத் திறமையான சித்தி பெற்ற வட பகுதி தமிழ் மாணவர்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்களை இழக்க: புள்ளிகள் குறைந்த சிங்கள மாணவர்களுக்கு அந்த வாய்ப்புக்கள் கிட்டியது. இதனால் தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்ட விரக்தி பின்னர் தமிழ்மக்களின இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

கல்வித் தரப்படுத்தலும் பொருட்களின் தட்டுப்பாடு நிலைமையும் தமிழ் இளைஞர்களுக்கு இரண்டு புதிய பாதைகளைத் திறந்துவிட்டிருந்தது. ஒன்று வசதிவாய்பிருந்த குடும்பத்து இளைஞர் குழாமின் வெளிநாட்டு நகர்வு ஏற்பட்டது. அவ்வாறான வசதி நிலைமையில் இல்லாதவர்கள் மிளகாய்ச் செய்கையில் தங்களை ஈடுபடுத்த வன்னிக்கு அதிலும் குறிப்பாக விஸ்வமடு இளைஞர் குடியேற்ற திட்டத்திற்கு சென்றார்கள். செத்தல் மிளகாய் இறக்குமதி தடைப்பட்டிருந்ததால் ஒரு இறாத்தல் செத்தல் மிளகாய் ரூபா 150 தொடக்கம் ரூபா 200 வரை அன்றைய விலையாக இருந்தது. அவ்வாறு மிளகாய் செய்கையில் ஈடுபட்டவர்கள் சிறிய காலத்திலேயே மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரம் கார் வீடு என சொத்துக்கள் கொண்ட தனவந்தர்களாயினர்.

**உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு**

இந்தச் சூழ்நிலையில்தான் நான்காவது உலகத் தமிழரராய்ச்சி மகாநாட்டை இலங்கையில் நடாத்த முடிவுசெய்யப்பட்டிருந்தது. இலங்கை அரசு அவ்விழாவை கொழும்பில் கொண்டு நடாத்தவே விருப்பம் தெரிவித்தது. ஆனால் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் பேராசிரியரான சு.வித்தியானந்தன் வேறு விதமாக சிந்தித்தார். தமிழ் மொழி அறிவிலும் உரைநடையிலும் தமிழரின் பண்பாடு கமழும் கலை கலாச்சார விழுமியங்கள் பரந்துபட்டு விளங்கும் யாழ்ப்பாணமே தகுந்த இடமென்ற நிலைப்பாட்டில் இருந்ததால் யாழ்ப்பாண நகரம் விழா நடத்தும் இடமாகியது. இது அரசுக்கு ஏற்பில்லை. நியமன பாராளுமன்ற உறுப்பினராகி தபால் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த தமிழரான குமாரசூரியர் யாழ் மேயராகவிருந்த அல்பிரட் துரையப்பா ஆகியோர் விழாவை குழப்புவதற்கு செயற்பட்டிருந்தனர்.

**விழாக்கோலம் பூண்ட யாழ்நகர்**

1974 ஜனவரி 3ம் திகதியிலிருந்து 9ம் திகதி வரை வெளிநாட்டு உள்நாட்டு பிரதிநிதிகள் என மாநாட்டுக்கு வந்திருந்த கல்விமான்கள் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன. மகாநாட்டின் ஆரம்ப நாள் தொடக்கம் யாழ்நகர் மங்களகரமான சூழலை கொண்ட ஒரு பசுமைச்சோலையாக மாறிக் காட்சியளித்தது. யாழ்நகரின் முக்கிய சந்திகள் தோறும் பந்தல் மேடை அமைத்து வாழை நட்டு கரும்பு கமுகு தாவரங்கள் மேடையருகே காட்சியில் காணக்கூடியதாக இருந்தது. பூச்சரங்களும் மாவிலையும் தோரணங்களும் கண்ணைக் கவரும் வண்ணம் காட்சிகளாயின. மாலை வேளை ஆரம்பமானதும் அங்கே கேட்பதற்கு காதுக்கு இனிய கானங்களாயின. மங்கள இசையான நாதஸ்வர இசையில் ஆரம்பித்து வாத்திய இசைக்கருவி இசைகள் கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் என மாநாடு ஆரம்பிக்கும் நேரம் வரையிலும் அதன்பின் முடிந்த பின்னரும் காதினை குளிரவைத்தது..

**துயரச் சம்பவம்**

இவற்றிக்கெல்லாம் கண்ணூறு பட்டது போல நடந்தது ஜனவரி 10ந் திகதிய சம்பவம். அன்று மகாநாட்டின் கடைசி நாள். மகாநாட்டில் கலை கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

தென்னிந்தியாவிலிருந்து வந்த பேராசிரியர் நைனா முகம்மது உரையாற்றிக் கொண்டிருக்கும் வேளை பொலிஸார் சகல பாதுகாப்புக்குரிய ஆயுதங்களுடனும் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரா தலைமையில் நாற்பதிற்கும் கூடியவர்கள் ஒரு டிரக் வண்டியில் மக்கள் குழுமியிருந்த வீதியில் வந்து வழிவிடும்படி கேட்டுள்ளார்கள். அசைய முடியாதவாறு திரண்டிருந்த மக்களால் விலத்திகொடுக்க முடியவில்லை. அதனால் பொலிஸார் இறங்கி வழியை விடவைப்பதற்கு மக்களைத் தாக்கியுள்ளார்கள். மக்கள் சிதறுண்டு ஓட துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டுள்ளார்கள். அப்போது சில ரவைகள் மின்கம்பியில் பட்டு அறுத்து விட்டன. அதனால் பொது மக்கள் மின்சாரம் தாக்கி அக்கணமே உயிரிழந்துள்ளர்கள். அச்சம்பவத்தில் வேறு விதமாகவும் மொத்தம் 11 பொது மக்கள் மரணித்துள்ளார்கள். இந்தச் சம்பவத்திற்கு அப்போது மேயராகவிருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு சம்பந்தமுண்டு எனவும் அவரின் ஆதரவுடனேயே நடைபெற்றிருந்தது என்பதை அறிந்த அன்று தீவிரவாதியாயிருந்த பிரபாகரன் அவரைக்

கொலை செய்ததின் மூலம் அது தமிழினத்தின் உள்நாட்டு போருக்கு வித்திட்டது எனலாம்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானம்**

1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்பு அவ்வாட்சியின் கல்வித் தரப்படுத்தல் உலக தமிழாராய்ச்சி 4வது மாநாட்டில் இடம்பெற்ற சம்பவம் ஆகியனவற்றின் ஒட்டுமொத்த விளைவே தனிநாடு கோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் உருப்பெற காரணமாக அமைந்தது. இருந்தாலும் தாயார் ஸ்ரீமாவோவின் ஆட்சியில் அவலங்களைச் சந்தித்திருந்த போதும் மகள் சந்திரிக்கா 1994ல் ஜனாதிபதித் தேர்தலில் சமாதான தேவதையாக தமிழ் சிங்கள மக்களின் ஏகோபித்த தெரிவாக 62% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

(தொடரும்)